IV.—GOVERNMENT BILL.

THE MADRAS (TRANSFERRED TERRITORY) INCORPORATED AND UNINCORPORATED DEVASWOMS BILL, 1959.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Mr. Speaker, Sir, I beg leave to introduce the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill[a], 1959.

MR. SPEAKER : The question is—

'That leave be granted for the introduction of the Madras (Transferred Territory) Incorporated and Unincorporated Devaswoms Bill, 1959.'

The motion was put and carried.

THE HON. SRI M. BHAKTAVATSALAM : Sir, I introduce the Bill.

MR. SPEAKER : The Bill is introduced.

V.—DISCUSSION *RE* QUESTION HOUR.

SRI M. KALYANASUNDARAM : *கனம் சபாநாயகர் அவர்களே, கேள்வி நேரம் இரண்டு நாட்களாக முக்கால் மணி நேரத்தில் முடிந்து விடுகிறது. நேற்றும் இன்றைக்கும் சில அமைச்சர்கள் இல்லாத காரணத்தால் முக்கால் மணி நேரத்தில் முடிந்து விட்டது. அதனால் இப்போது இருப்பதை விட இன்னும் அதிகமாக பத்து கேள்விகளையாவது சேர்த்துக்கொண்டு வரக்கூடாதா என்று கேட்க விரும்புகிறேன். அமைச்சர்கள் வரமுடியவில்லையானால் அவருடைய கேள்விகளை சேர்க்காமல், வரக்கூடிய அமைச்சர்களுடைய கேள்விகளை அதிகமாக ஏன் சேர்த்துக்கொள்ளக் கூடாது ? அல்லது வேறு கேள்விகளையாவது சேர்த்துக்கொள்ளக் கூடாதா என்று கேட்கிறேன். அதைப்பற்றி கொஞ்சம் யோசித்து முடிவு செய்யவேண்டும் என்று கேட்டுக்கொள்ளுகிறேன்.*

MR. SPEAKER : *அதற்கு நான் என்ன பண்ணுவது ? கேள்விகள் சுமார் பதினைந்து நாட்களுக்கு முன்னதாகவே அச்சகத்திற்கு அனுப்பப்படுகின்றன. அப்போது எந்தெந்த மந்திரிகள் வரமாட்டார்கள் என்பது தெரிவது இல்லை. கேள்விகள் அச்சடித்து வந்த பிறகு மந்திரிகள் தாங்கள் சபைக்கு வரமுடியாது என்றும் வெளியூருக்குப் போவதாகவும் சொல்லுகிறார்கள். அதன் பிறகு அவைகளை மாற்றி அமைப்பது என்பது முடியாத காரியம். அவர்கள் முன் கூட்டியே வரமுடியாது என்று சொன்னால் அவர்களுடைய கேள்வியைச் சேர்க்காமல் இருக்கலாம், அல்லது அதற்கு வேறு உபாயம் உண்டு. அதாவது கனம் அங்கத்தினர்கள் இரண்டு அல்லது மூன்று உப கேள்விகளுக்கு மேல் கேட்பதில்லை என்று உறுதி கொடுத்தால் இன்னும் அதிகப்படியாக பத்து கேள்விகளை சேர்த்துக்கொள்ளலாம். அல்லது*

---

a Published in the *Fort St. George Gazette* Extraordinary, dated 9th December 1959.